## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கரூர் மாவட்டம்

## செய்தி வெளியீடு

இந்திய அரசின் ''ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகள்'' பெற விண்ணப்பிக்கலாம்.

இந்திய அரசின் சார்பில் பல்வேறு நிகழ்வுகளான நீரில் முழ்கியவரை காப்பாற்றுதல், மின்சார விபத்துக்கள், விபத்துக்கள், தீ விபத்துக்கள், நிலச்சரிவு, விலங்கினை தாக்குதல், சுரங்க மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு மனித உயிர்களை மீட்பவர்களுக்கு கீழ்காணும் பிரிவுகளில் ஜீவா ரக்ஷா பதக்க விருதுகள் வழங்கி வருகிறது.

சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை வீரத்துடன் போராடி மீட்பவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

உத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் துணிச்சலுடன் தாமதமின்றி செயல்பட்டு மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை போராடி மீட்பவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

ஜீவன் ரக்ஷா பதக்கம் தனக்கு காயம் ஏற்படினும், வீரத்துடன் தாமதமின்றி செயல்பட்டு உயிரைக் காப்பாற்றுபவர்களுக்கு இவ்விருது வழங்கப்படும்.

அதன்படி 2016 –2017 ஆம் ஆண்டிற்கான ஜீவன் ரக்ஷா பதக்க விருதிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்காணும் விருதிற்கான விண்ணப்பம் மற்றும் முக்கிய விவரங்கள் தமிழ்நாடு விளையாட்டு ஆணைய இணைய தள முகவரியான **www .sdat.tn.gov.in** மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2016 –2017 ஆம் ஆண்டிற்கான ஜீவன் ரக்ஷா பதக்க விருதிற்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 116 ஏ, ஈவெரா, பெரியார் நெடுஞ்சாலை, நேருபூங்கா சென்னை 600 – 084 என்ற முகவரிக்கு வருகின்ற 16.08.2017 ம் தேதிக்குள் சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் கூடுதல் விவரங்கள் பெற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மேலாளர் 7401703452 என்ற செல்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் .

ஒம்/ –தே.சாந்தி,

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்,
கரூர்